**கவனிக்க** .- 2015.02.20 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1904 - 2015 පෙබරවාරි මස 27 වැනි සිකුරාදා - 2015.02.27**

*1904 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | 496 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, மாச்சு மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, மாச்சு மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் - வெற்றிடம்

## வடமேல் மாகாண மாகாண சபை

வடமேல் மாகாண சுகாதார, தேசிய வைத்திய, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு

வடமேல் மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட பகுதி தேர்ச்சி பெற்ற ஆரம்ப மட்டப் பணியாளர் ஆட்சேர்ப்பு முறைமையில் உள்ளடங்கும் வடமேல் மாகாண சுகாதாரத் திணைக்களம் மற்றும் மாகாண ஆயுர்வேதத் திணைக்களம் ஆகியவற்றில் வெற்றிடமாகக் காணப்படும் கீழ்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக வெளிவாரியான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வடமேல் மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் வெற்றிடமாயுள்ள பதவிகள்

1. தச்சர்
2. நீர்க்குழாய்ப் பொருத்துநர்
3. தையல் பணிப்பெண்
4. ஆய்வுகூட உதவியாளர்
5. மின் தொழிலாளி

வடமேல் மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தில் வெற்றிடமாயுள்ள பதவிகள்

1. மருந்துக் கலவையாளர்
2. இயந்திர இயக்குநர்

(1) **தகைமைகள்** :
- (1) இலங்கைப் பிரசையாயிருத்தல்.
- (2) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முந்திய மூன்று வருடங்கள் வடமேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல்.
- (3) சிறந்த ஒழுக்கமும் உடல் ஆரோக்கியமும் மிக்கவராக இருத்தல்.

(2) **கல்வித் தகைமைகள்** : கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரப் பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு (2) பாடங்கள் சித்தியடைந்திருத்தல்.

(3) **தொழில்நுட்பத்திறன்** :
1. தச்சர் : பதவிக்குரிய தொழில் சம்பந்தமாக NVQ 2 அல்லது NVQ 3 மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல்.
2. நீர்க்குழாய்ப் பொருத்துநர் (Plumber) : பதவிக்குரிய தொழில் சம்பந்தமாக NVQ 2 அல்லது NVQ 3 மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல்.
3. தையல் பணிப்பெண் : பதவிக்குரிய தொழில் சம்பந்தமாக NVQ 2 அல்லது NVQ 3 மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல்.
4. ஆய்வுகூட உதவியாளர் : பதவிக்குரிய தொழில் சம்பந்தமாக NVQ 2 அல்லது NVQ 3 மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல்.
5. மின் தொழிலாளி (Electrician) : அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப கல்லூரியொன்றில் அல்லது தொழிற்பயிற்சி நிறுவனமொன்றில் மூன்றாம் நிலைக் கல்வி நிலையத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மின்னியல் தொடர்பான பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.
6. மருந்துக் கலவையாளர் : பதவிக்குரிய தொழில் சம்பந்தமாக தொழிற்பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் NVQ 2 அல்லது NVQ 3 மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல்.
7. இயந்திர இயக்குநர் (Machine Operator): அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப கல்லூரியொன்றில் அல்லது தொழிற்பயிற்சி நிறுவனமொன்றில் அல்லது மூன்றாம் நிலைக் கல்வி நிலையத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் இயந்திரவியல் தொடர்பான பயிற்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

(4) **அனுபவம்** : ஒவ்வொரு தொழிலுக்கும் உரிய துறையில் அரச நிறுவனமொன்றில்/அரச கூட்டுத்தாபனங்கள்/சபைகள்/அதிகார சபைகள் அல்லது ஏனைய அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் குறைந்தது 02 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிருத்தல்.

(5) **வயதெல்லை** : 2015.03.13 ஆந் திகதிக்கு வயது 18 வருடங்களுக்குக் குறையாமலும் 45 க்கு மேற்படாமலும் இருத்தல்.

(6) **தெரிவு செய்யப்படும் முறைமை** : விண்ணப்பங்கள் பரீட்சிக்கப்பட்டதன் பின்பு ஓர் நேர்முகப் பரீட்சை மூலம் தகுதியானோர் தெரிவு செய்யப்படுவர்.

(7) **சம்பள அளவு (மாதாந்த)** : PL 2 - 2006 -A, ரூபா 12,210-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,600

(8) **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்** :
- (i) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் உடையது;
- (ii) நியமனம் 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும்;

(9) **விண்ணப்பித்தல்** :

(i) கீழ் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு ஏற்பத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவமொன்றை 2015.03.13 ஆந் திகதி அல்லது அத்திகதிக்கு முன்பாக "செயலாளர், வடமேல் மாகாண சுகாதார, தேசிய வைத்திய, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு, 3 ஆம் மாடி, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்;

(ii) ஒழுங்காகப் பூர்த்திசெய்யப்படாத, தகைமையற்ற மற்றும் உரிய திகதிக்குப் பின்பு கிடைக்கப் பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றமை குறித்து அறிவிக்கப்படமாட்டாது;

(iii) விண்ணப்பப்படிவங்கள் உள்ளடக்கப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் தான் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட வேண்டியதோடு ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறாக விண்ணப்பங்கள் முன்வைக்கப்பட வேண்டும்.

(10) **சேவையில் இணைத்துக்கொள்ளும் முறைமை** : பகுதித் தேர்ச்சி பெற்ற ஆரம்ப மட்டப் பணியாளர் ஆட்சேர்ப்பு முறைமையில் உள்ளடங்கும் ஏற்பாடுகளுக்கு ஏற்ப இந்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுகிறது. பதவிக்குரிய ஆட்சேர்ப்பு முறைமையில் உள்ளடங்கும் ஏனைய ஏற்பாடுகள் அவ்வாறே அமுலாகும்.

செயலாளர்,
சுகாதார, தேசிய வைத்திய, விளையாட்டு
மற்றும் இளைஞர் விவகாரங்கள்
அமைச்சு (வடமேல் மாகாணம்).

வடமேல் மாகாண சுகாதார, தேசிய வைத்திய,
விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு,
மாகாண சபை அலுவலகத் தொகுதி,
3 ஆம் மாடி,
குருநாகல்,
2015.02.13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வடமேல் மாகாண மாகாண சபை**

**வடமேல் மாகாண சுகாதார, தேசிய வைத்திய, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு**
**பகுதி தேர்ச்சி பெற்ற ஆரம்ப மட்டப் பணியாளர் பிரிவில் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளுதல் (PL2)**

பதவி :----.
திணைக்களம் :----.

1. முழுப்பெயர்:----.
2. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
3. நிரந்தர முகவரி :----.
4. பால் நிலைமை :----.
5. பிறந்த திகதி : ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
6. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
7. இனம் :----.
8. திருமணமானவர், திருமணமாகாதவர் :----.
9. கிராம அலுவலர் பிரிவு :----.
10. பிரதேச செயலகப் பிரிவு :----.
11. மாகாணத்தில் நிரந்தர வதிவுக் காலம் :----.
12. தொலைபேசி இலக்கம் :----.
13. கல்வித்தகைமைகள் : க. பொ. த. (சா/தரம்)

பரீட்சை சுட்டெண் மற்றும் வருடம் :----.

| *பாடம்* | *சித்தி* | *பாடம்* | *சித்தி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

14. தொழில்நுட்பத் திறன் :----.
15. சேவை அனுபவம் :----.
16. ஏனைய தகைமைகள் :----.

மேற்குறித்த தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

*2-816*